## தலைப்பு 321 - கிழக்கு மாகாண சபை - 2025

---------------------------------------------------------------

## 1. தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் பிரதான செயற்பாடுகள்

### 1.1 தூரநோக்கு

மகிழ்ச்சி, நல்லிணக்கம் மற்றும் நல்லாட்சியுடன் கூடிய நிலையான வளர்ச்சிக்கான வளமான மாகாணம்

### 1.2 நோக்கம்

நியாயமான வள முகாமைத்துவம் மற்றும் நல்லாட்சி மூலம் வறுமையை ஒழித்து, சமூக, பொருளாதார அபிவிருத்தியை உறுதிசெய்து, அபிவிருத்தி நன்மைகளை நியாயமான பங்கேற்புடன் பகிர்ந்து கொள்வதன் மூலம் அனைவருக்கும் நிலையான சமாதானத்துடன் கூடிய வளமான மாகாணத்தை உருவாக்கல்.

### 1.3 செயற்பாடுகள்

இலங்கை அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தின் ஒன்பதாவது அட்டவணை மாகாண சபைகளின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளைக் குறிப்பிடுகின்றது. மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட 37 விடயப்பரப்புக்களைக் கொண்டமைந்துள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

கிழக்கு மாகாண சபைக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா. 60,053.00 மில்லியன் தொகையானதுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா. 57,310.90 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, சேமிப்புக்களானது மொத்த தேறிய நிதியேற்பாடுகளில் ரூபா. 2,742.10 மில்லியன் அல்லது 4.57 சதவீதம் ஆக காணப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ள.

| செலவினம் | 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | (%) |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 51,303.00 | 49,490.00 | 1,813.00 | 3.53 |
| மூலதனம் | 8,750.00 | 7,820.90 | 929.10 | 10.62 |
| **மொத்தம்** | **60,053.00** | **57,310.90** | **2,742.10** | **4.57** |

## 3. கணக்காய்வு அவதானிப்பு

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகள் மாகாண சபை நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை நிதியம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.